2. தகவல் கோரல்

(அ) அனுமதி மறுக்கப்பெற்ற பிரச்சினைகள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் ஒரு பிரச்சினையை எழுப்ப அனுமதிக்க இருக்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். திருமதி பொன்னம்மாள், நீங்கள் கொடுத்ததற்கு நான் உங்களுக்குப் பதில் கொடுத்திருக்கிறேன். நான் உங்களுக்கு விளக்கம் கொடுத்த பிறகு இங்கே வந்து எழுப்பக் கூடாது. (குறுக்கீடு) வேறு ஒரு பிரச்சினையை இன்றைக்கு எடுத்துக் கொள்ள இருக்கிறேன்.

திரு. வே . தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் பிரச்சினைக்கு பிறகு வருகிறேன். உட்காருங்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதிகள் எல்லாம் இருக்கின்றன. (குறுக்கீடுகள்) நான் உங்களுக்கு விளக்கம் அளித்ததற்குப் பிறகு இங்கே வந்து எழுப்பக் கூடாது என்றும் விதியிருக்கிறது. (குறுக்கீடுகள்) எல்லா விதிகளையும் விட்டுவிடுங்கள் என்று சொன்னால் நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடுகள்) நான் மறுத்த பிரச்சினையை இங்கே வந்து எழுப்பக் கூடாது என்றும் விதியிருக்கிறது. (குறுக்கீடுகள்) விதியிருக்கிறபோது நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடு) விதியிருக்கிறது என்று சொல்லிவிட்டு நீங்கள் நின்றால் அதிலே பொருளே இல்லை. (குறுக்கீடுகள்) இங்கே இப்படி எழுப்பக்கூடாது என்ற விதியிருக்கிறது என்பதை நான் சொல்கிறேன். (குறுக்கீடு) அந்த விதியிருக்கிறது என்று நீங்களும் ஒத்துக் கொள்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இல்லை. இது முறையல்ல. (குறுக்கீடுகள்) சந்தனக் கடத்தல் வீரப்பன் வனத்துறை அதிகாரிகள் சிலரைக் கடத்திச் சென்று பிணைக் கைதிகளாக வைத்திருப்பது பற்றிய ஒரு பிரச்சினையை அவையின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று சில உறுப்பினர்கள் கோரியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) பீட்டர் அல்போன்ஸ், எதற்கு நீங்கள் எழுந்து நிற்கிறீர்கள்? திருமதி பொன்னம்மாள் அவர்கள் கேட்டார்கள், நான் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) விளக்கம் இதிலே

தேவையில்லை. (குறுக்கீடு) நான் உங்களுக்கு எழுத்து மூலமாக அதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்ட பிரச்சினையை இங்கே வந்து எழுப்ப முடியாது. (குறுக்கீடு) இங்கு வந்து எழுப்ப முடியாது. (குறுக்கீடு) மறுபரிசீலனை செய்யுங்கள் என்று சொல்வதைக்கூட என்னுடைய அறையிலே வந்துதான் கேட்க வேண்டும். இங்கு வந்து எழுப்ப முடியாது என்று விதி இருக்கிறது. எனவே, அந்தப் பிரச்சினையை இங்கே எழுப்பக்கூடாது, எழுப்ப முடியாது. (குறுக்கீடு) ஈஸ்வரன், நீங்கள் ஒன்றும் கொடுக்கவில்லை. கொடுக்காத ஈஸ்வரன் எதற்கு எழுந்து நிற்கிறீர்கள்? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அந்தப் பிரச்சனை தொடர்பானதை இங்கே எழுப்ப முடியாது என்று விதி இருக்கிறது. (குறுக்கீடு) விதியில் "No Motion which seeks to raise discussion on a matter pending before any statutory tribunal...." என்று இருக்கிறதே தவிர (குறுக்கீடுகள்) இல்லை, தெளிவாக விதி இருக்கிறது. (குறுக்கீடுகள்) அதிலே இல்லாத பிரச்சினை அல்ல. அதற்கு வழிவகுக்கிற பிரச்சினையை எழுப்ப முடியாது. (குறுக்கீடுகள்) சந்தனக் கடத்தல் வீரப்பன் வனத்துறை அதிகாரிகள் சிலரைக் கடத்தி சென்று வைத்திருப்பது குறித்த ஒரு பிரச்சினையை பேரவை விதி 56-ன் கீழ் எழுப்ப வேண்டுமென்று ஒரு அறிவிப்பை மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. எஸ். எஸ். ராமசுப்பு, திரு. இரா. தாமரைக்கனி, திரு. வே. தம்புசாமி, திரு. வே. பெரியசாமி ஆகியோர் என்னிடத்தில் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) அதுபற்றி பேரவையில் சிறப்புக் கவன ஈர்ப்பாக எழுப்பலாம் என்று நான் அனுமதி அளித்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) சிறப்புக் கவன ஈர்ப்பாக அதை எடுத்துக் கொள்கிறேன். அதை இப்போது பேரவையில் எழுப்பலாம். (குறுக்கீடுகள்)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(திரு. ஆர். சிங்காரம், திரு. இரா. அப்பு நடேசன், திரு. கே. கே. சின்னப்பன், திரு. சஞ்சய் ராமசாமி, திரு. கே. செல்வராஜ், திருமதி ஜீனத் சர்புதீன் மற்றும் திரு. வே. கண்ணன் ஆகியோரைத் தவிர காங்கிரஸ் கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

முற்பகல் 11.25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. திரு. ராமசுப்பு, இருக்கையில் இல்லை. (குறுக்கீடுகள்) எனவே அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரான திரு. வே. பெரியசாமி பேசலாம் (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், நான் சொல்லும்போது இருக்கையில் இல்லை. திரு. வே. பெரியசாமி.

1995 நவம்பர் 3]

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 66,--"No Motion which seeks to raise discussion on a matter pending before any statutory tribunal or statutory authority performing any judicial or quasi-judicial functions or any commission or court of enquiry appointed to enquire into, or investigate any matter shall ordinarily be permitted to be moved." --என்று இருக்கிறது No motion shall ordinarily be permitted to be moved. எனவே சாதாரண நோக்கிலே கூட அத்தகைய, இந்த தீர்மானங்களை இங்கே முன்மொழிவதற்குக்கூட அனுமதிக்க முடியாது என்று தெளிவாக விதி இருக்கிறது. ஆகவேதான், நான் அனுமதி மறுத்திருக்கிறேன். எனவே, இதை மேலும் பிரச்சினை ஆக்க வேண்டாம் (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன், நான் கூப்பிடும்போது இல்லையென்றால் என்ன செய்ய முடியும் பிரச்சினை விசாரணைக் கமிஷனிலே இருக்கிற காரணத்தினாலே எழுப்ப முடியாது என்று விதியிலே இருக்கிறது. நான் அடுத்தப் பிரச்சினையை எடுத்திருக்கிறேன் உட்காருங்கள். (குறுக்கீடு).. மாண்புமிகு பேரவை முன்னவர்.

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெளிவாக, விதி 66-ல் சொல்லப்பட்டிருக்கிறது--"சட்டப்படி அமைக்கப் பெற்ற விசாரணைக் குழு, நீதிமன்றமாக அல்லது பகுதி நீதிமன்றமாக இயங்க சட்டப்படி அமைக்கப்பெற்ற ஆணைக்குழு அல்லது ஒரு பொருள் குறித்து ஆய்வதற்காக அல்லது புலனாய்வதற்காக அமைக்கப் பெற்ற குழு அலலது விசாரணை மன்றம் ஆகியவற்றின் ஆய்வில் இருக்கும் பொருள் குறித்து விவாதம் எழுப்பும் வகையில் அமையும் தீர்மானம் சாதாரணமாக அனுமதிக்கப் பெறலாகாது" என்று திட்டவட்டமாக, தெளிவாக இருக்கிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சாதாரணமாகவே அனுமதிக்க முடியாது. நீங்கள் என்ன சொன்னீர்கள்? இந்தப் பிரச்சினையை விட்டு வெளியே வந்துவிட்டேன் என்று சொன்னீர்கள்? (குறுக்கீடு) திரும்பத் திரும்ப ஞானசேகரன் பேசிக் கொண்டிருந்தால் அது முறையில்லை. (குறுக்கீடு) ஈஸ்வரன் முறையற்ற போக்கிலே நடந்து கொண்டே இருக்கவேண்டாம் (குறுக்கீடு) உட்காருங்கள். முறையற்ற முறையிலே நடப்பது ஈஸ்வரனுக்கு வழக்கமாகிவிட்டது. உட்காருங்கள் (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன் வெளியே போனீர்களே, போனால்

போய்விட்டு வரவேண்டியதுதானே, பிறகு இங்கு வந்து பழையபடி பேசமுடியாது. முடியாது, உட்காருங்கள். ஈஸ்வரன், முறையற்ற போக்கிலேயே தொடர்ந்து நடந்துகொண்டு இருப்பது முறையல்ல. ஈஸ்வரனுக்கு இது வழக்கமாகிவிட்டது. இது முறை இல்லை. இந்த மாதிரி முறையற்ற போக்கை நான் அனுமதிக்க முடியாது. *(குறுக்கீடு)* திரு. வே. பெரியசாமி *(குறுக்கீடு)*.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: I am on a point of order...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள் *(குறுக்கீடு)* பாயின்ட் ஆப் ஆர்டர் கிடையாது. திரு. பெரியசாமியைப் பேச அழைத்து இருக்கிறேன்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) சந்தனக் கடத்தல் வீரப்பன் வனத்துறை அலுவலர்கள் சிலரைக் கடத்தி பிணை கைதிகளாக வைத்திருப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. பெரியசாமி.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதியில் *1-11-95* காலை *6.30* மணியளவில் சந்தனக் கடத்தல் வீரப்பனால் திரு. உடையார் என்ற காவலர் ஒருவரும், திரு. செ. ராஜேந்திரன் என்ற வனக் காவலர் ஒருவரும், திரு. எம். சுப்பிரமணி என்ற வனக்காவலர் ஒருவருமாக, மூன்று பேர்களை வீரப்பன் கடத்திச் சென்று விட்டான். அந்தப் பகுதியில் வனத்துறைக்குச் சொந்தமான இடத்தில் புளியமரக்கன்றுகள், ஏறத்தாழ நான்கு ஏக்கர் பரப்பிலே நட்டு அதனைச் சுற்றி கம்பிவேலி போட்டு அந்த மரக்கன்றுகளை வனத்துறை மூலமாக வளர்த்து வந்திருக்கிறார்கள். நேற்றைக்கு முந்தைய நாள் இரவு அந்தப் பகுதிக்கு வந்த வீரப்பன், அவைகளை எல்லாம் வெட்டி வீசிவிட்டு, வளர்ந்து வந்த பச்சிளம் செடிகளை கற்றை கற்றையாகப் பிடுங்கி, ஆங்காங்கே போட்டுவிட்டுச் சென்ற காரணத்தினால், அதைப் பார்ப்பதற்காக சென்று இருந்த ஒரு வாட்சர், அதை யாரோ பிடுங்கி இருக்கிறார்களே எனறு சொல்லி அடுத்தநாள் வனத்துறையைச் சேர்ந்த ஜீப்பிலே அங்கு போய் பார்க்க சென்றார்கள். காட்டுக்குள்ளே ஒரு தடம் போய்க்கொண்டிருந்தது. அதை பார்த்து காட்டுக்கு உள்ளே சென்றபோது சிலர் தென்பட்டார்கள். அவர்கள் வீரப்பனுடைய ஆட்களா என்று தெரியவில்லை. அந்தப் பகுதியைச்